**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்**
**அ.வ.எண். 124/2017**

பெயர் : பழனிச்சாமி
சாட்சி – வா.சா–1 நாள்: 14.03.2025

---

**குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து விவரத்தில் இரண்டாவது அயிட்ட சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு தடங்களும் நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் சொத்தினை பார்வையிட்ட அன்று, அங்கு இல்லை என்றால் தடம் இருந்தது அதனை அடைத்து விட்டார்கள். நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் தடம் இருந்ததற்கான அறிகுறியே இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பிஏபி வாய்க்காலை ஒட்டி வடபுறம் கிழமேலாக உள்ள பூமி க.ச.62/2 காலை சுப்ரமணியத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2. தென் வடல் ரோட்டில் இருந்து நேராக தனது பூமிக்கு சுப்பிரமணியம் நேரடியாக செல்ல முடியும் என்றாலும் அவ்வாறு தான் அவர் உபயோகித்து வருகிறார் என்றாலும் சரிதான். க.ச.62/3 காலை மொத்தம் ஏழு செண்ட் என்றால் சரிதான். அதில் ½ செண்ட் வாத்தியார் நடராஜனுக்கும், 3 செண்ட் பெரியசாமிக்கும் மற்றும் 3 ½ செண்ட் சுப்ரமணியத்திற்கும் பாத்தியம் என்றால் சரிதான். சுப்ரமணியம் தனது பூமியின் மேற்கோட்டில் கள்ளுக்கால் நட்டு கம்பி வேலி அமைத்துள்ளார் என்றால் கல் மட்டும் தான் நட்டுள்ளார் கம்பி வேலி எதுவும் அமைக்கவில்லை.

3. வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக நான் க.ச.61/4 தரிகுடோன் கட்டியுள்ளேன். நான் எனது தரிகுடோனுக்கு பெரியசாமியின் க.ச.62/7 பூமி வழியாகத்தான் தறிகுடோனுக்கு தேவையான மூலப்பொருட்களை எடுத்துச் செல்கிறேன் என்றால் சரிதான். பிஏபி வாய்க்காலில் பாலம் கட்டும்போது முதலில் 20 அடிக்கு தான் கட்டடப்பட்டது என்றால் சரியல்ல.

4. நான் எனது வழக்குரையில் 1984 ஆம் ஆண்டு 20 அடிக்கு தான் பிஏபி வாய்க்காலில் பாலம் கட்டடப்பட்டுள்ளது என்று சொல்லி உள்ளேன் என்றால் நான் 40

அடி என்று தான் சொல்லி உள்ளேன். 2012 ஆம் ஆண்டு எனது தந்தை எனக்கு எழுதிக் கொடுத்துள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்டுள்ள ஷரத்துக்கள் எதுவும் 1982 ஆம் ஆண்டு பாகசாசன பத்திரத்தில் எனது தந்தையாருக்கு ஒதுக்கப்பட்ட பங்கில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

5. எனது தந்தை எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள க.ச.61/4 காலையில் 1.15 ஏக்கர் பூமி மட்டும் தான் நடைமுறைக்கு வந்துள்ளது மற்ற சொத்துக்கள் எதுவும் நடைமுறைக்கு வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. க.ச.62 காலையில் மேற்கோட்டில் தென்னை மரங்கள் எதுவும் தென் வடலாக இருப்பதாக சொல்லவில்லை என்றால் க.ச.61 காலையில் உள்ளதாக தான் சொல்லி உள்ளேன்.

6. ஆணையர் அறிக்கையில் க.ச.62 காலையில் தென்னை மரங்கள் சுமார் 30 அடி உயரத்திற்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவை க.ச.61 காலையில் தான் உள்ளது. தென்னை மரங்கள் க.ச. 61 காலையில் தான் உள்ளன என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1929 மற்றும் 1982 ஆகிய இரண்டு பத்திரங்களிலும் நான் சொல்லியுள்ளவாறு தடபாத்தியம் எதுவும் கண்டு எழுதப்படவில்லை என்றால் 1929 ஆம் ஆண்டு பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது.

7. நான் கேட்கக்கூடிய விளம்புகை பரிகாரத்திற்கான தடமே கிடையாது என்றால் சரியல்ல. நான் சொல்லி உள்ளது போல் தடத்தில் பிரதிவாதிகள் மாட்டுக் கொட்டகை எதுவும் கட்டவில்லை என்றும் அது அவர்களுடைய இடத்தில் தான் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. கிழமேல் ரோட்டில் இருந்து க.ச.62 காலையில் தெற்கே வரும் தடம் பிரதிவாதிகளின் குடோன் வரை மட்டும்தான் வருகிறது என்றும் அதற்கு தெற்கே எந்த தடமும் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் கிடைக்கதக்கதல்ல என்றும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2025.03.14 19:44:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.